முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# Provincial Education Department (NWP)

ඉතිහාසය I
வரலாறு I
History I

33 T I

පැයයි
ஒரு மணித்தியாலம்
One Hours

තෙවන වාර විභාගය 2024(2025)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2024(2025)
Third Term Examination 2024(2025)

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

அறிவுறுத்தல்கள் :
1. எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
2. விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.
3. விடைத்தளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து பின்பற்றுக.
4. இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதின் மூலம் காட்டுக.

01. எமது நாட்டின் வரலாற்றைக் கற்பதற்கு பயன்படுத்தும் மிகப் புராதன இலக்கிய மூலாதார வகையாக அமைவது
(1) அட்டகதாக்கள் (2) வம்சக்கதைகள்
(3) தூது காவியம் (4) உபதேச நூல்கள்

02. தென் இந்திய இலக்கிய மூலாதாரங்களில் **அடங்காதது**
(1) சிலப்பதிகாரம் (2) பத்துப்பாட்டு
(3) மணிமேகலை (4) யாழ்ப்பாண வைபவமாலை

03. பின்வரும் நூலாசிரியர்களில் ஒல்லாந்து இனத்தை சேர்ந்தவர்
(1) ரொபட் நொக்ஸ் (2) பிலிப் பல்டியஸ்
(3) பர்னாவோ டி குவேரோஸ் (4) ஜுவாங் ரிபைரோ

04. பிளைத்தோசின் யுக தொல்பொருள் மூலாதாரம் கிடைக்கப்பெற்ற பிரதேசமாக அமைவது
(1) இப்பன்கடுவ (2) ஹல்துமுல்ல
(3) கல்சொஹன (4) இரத்தினபுரி

05. வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பான **பிழையான** கூற்றாக அமைவது
(1) நிலக்கண்ணாடியிலான கல்லாயுத பாவனை
(2) களிமண் ஓட மயானம் பயன்படுத்தல்
(3) நாடோடி வாழ்க்கை முறை
(4) கற்குகைகளை வாழ்விடமாக பயன்படுத்தல்

06. முன் வரலாற்று காலத்தில்அமையப் பெற்ற ஷீலா மஞ்சுசா மயானங்கள் கண்டு கொள்ளக் கூடிய இடம்
(1) பெரகல (2) ஹல்தமுல்ல (3) கல்செஹன் (4) ராவனா எல்ல

07. அநராதபுரம் "நுருபுரம்"என எச் சாசனத்தின் ஊடாக குறிப்பிடப்படுகின்றன.
(1) வல்லிப்புர பொற்சாசனம் (2) கல்பொத்த கல்வெட்டு
(3) வேவெல் கெடிய கல்வெட்டு (4) பணாகடுவ செப்புசாசனம்

❖ **கீழே A தொடக்கம் D வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக்கொண்டு 08,09ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

A. நதிக்கரையோரத்துக்கு அப்பால் குடியேற்றங்கள் நிறுவப்படல்.
B. மெகாலிதிக் மயான சம்பிரதாயம்.
C. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடல்.
D. உலர் தானியங்கள் பயிரிடல்.

08. மேலுள்ள தகவல்களில் முன் வரலாற்றுக்கால பண்புகளாக அமைவது
(1) A யும் B யும் (2) B யும் C யும் (3) C யும் D யும் (4) A யும் D யும்

09. ஆரம்ப வரலாற்றுக்கால தகவல்களாக அமைவது
(1) A யும் B யும் (2) B யும் D யும் (3) A யும் C யும் (4) A யும் D யும்

10. முன் வரலாற்று காலத்தில் நாட்டின் தலைவரைக் குறிக்கப் பயன்படுத்திய சொல்லாக அமைவது
(1) போசனி அரசன் (2) தொட்ட போஜக (3) மபுருமுகா (4) துகத ராஜ

11. இந்திய மௌரிய பேரசுடன் தொடர்புகளைப் பேணிய மன்னனாக கருதப்படுபவர்
(1) தேவநம்பிய தீசன் (2) துட்டகைமுனு (3) வசபன் (4) மகாசேனன்

12. ஆரம்பத்தில் வடிக்கப்பட்ட கல்வெட்டு வகையாக அமைவது.
(1) பாறைக் கல்வெட்டு (2) கற்பலகை கல்வெட்டு
(3) குகைக் கல்வெட்டு (4) இருக்கைக் கல்வெட்டு

❖ **பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையான தகவல்களைப் பயன்படுத்தி 13 ஆம், 14 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| மன்னன் | மூலாதாரம் | சேவை |
|---|---|---|
| A துட்டகைமுனு | D வல்லிபுர பொற்சாசனம் | G நாட்டை மாவட்டங்களாக பிரித்து நிர்வகித்தல் |
| B வசபன் | E பனாக்கடுவ செப்பேடு | H சோழரிடமிருந்து நாட்டைமீட்டல் |
| C 1ஆம் விஜயபாகு | F மகாவம்சம் | I எதிரிக்கும் மரியாதை செய்தல் |

13. துட்டகைமுனு மன்னனோடு தொடர்புடைய விடைத்தொகுதி
(1) A,E,I (2) A,D,G (3) A,F,I (4) A,F,H

14. 1ஆம் விஜயபாகு மன்னனோடு தொடர்புடைய விடைத்தொகுதி
(1) C,D,G (2) C,D,H (3) C,F,G (4) C,E,H

15. இந்நாட்டின் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாக பொருத்தமற்ற கூற்றை தெரிவு செய்க.
(1) அநுராதபுர 'காலசுமன' உள்நாட்டு சந்தைக்கு சிறந்த உதாரணமாகும்.
(2) வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் 'வணிஜ, வாபர' என அழைக்கப்பட்டமை.
(3) சந்தை நிர்வாக தொடர்பாக 4ஆம் உதய மன்னனால் உருவாக்கப்பட்ட சட்டங்களை கலுதிய பொகுன கல்வெடடில் காணலாம்.
(4) ஒழுங்கமைக்கப்பட்ட வர்த்தக சங்கங்கள் 'புகய, நியமஸ்தான' என அழைக்கப்பட்டடன.

16. அரசக்கு சொந்தமான நிலத்தில் பயிர்செய்வதற்காக அறவிடப்பட்ட வரி
(1) தக்கபதி (2) போஜகபதி (3) மதரமஞ்சக்க (4) கெதிஅட

17. நெல்மணி அளவிலான தங்க நகையில் 21 பூக்கள் செதுக்கப்பட்ட ஆபரணம் கிடைக்கப் பெற்ற இடம்
(1) அபயகிரி (2) சீகிரியா (3) ஜேத்தவனாராம (4) ருவன்வெளிசாய

18. பண்டைய விஞ்ஞான தொழிநுட்ப அறிவை பறைசாட்டும் சில நிகழ்வுகள் கீழே தரப்பட்டுள்ளது. இவற்றில் ஆரம்ப நிகழ்வாக அமைவது
(1) கற்பாறையிலிருந்து கற்பாலங்களை பிரித்தெடுக்க அமுக்கப் பிரயோகம் பயன்படுத்தப்பட்டமை.
(2) நீர் முகாமைத்துவத்துக்காக குளங்கள் அமைக்கப்பட்டமை.
(3) உயரமான கட்டிடங்களை பாதுகாக்க 'வஜ்ர சும்பட்ட' பயன்படுத்தப்பட்டமை.
(4) முறையாக திட்டமிடப்பட்ட கேத்திரகணித மாதிரிக்கேற்ப நகர, பூங்கா நிர்மானம் இடம்பெற்றமை

Past Papers Wiki

19. ஹவஜர,தீதிய, முகூர்த்தம் போன்ற அளவீட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டது
   (1) காலத்தை அளவிடுவதற்கு (2) நிலத்தை அளவிடுவதற்கு
   (3) நிறையை அளவிடுவதற்கு (4) நீளத்தை அளவிடுவதற்கு

20. நீர் நிலையியற் கோட்பாட்டை எமது முன்னோர் பயன்படுத்தியுள்ளமைக்கான சான்றாக அமையும் நிர்மானம்
   (1) சமனலவெவ இரும்பு உருக்கு உலை (2) தெதிகம யானை விளக்கு
   (3) சீகிரிய பூம்புனல் (4) வெலிகந்த காவுத கணு

21.

| ‘அ’ நிரல் | ‘ஆ’ நிரல் |
|---|---|
| 1. இப்னு சஹ்ரியர் | A. கி.பி 9ஆம் நூற்றாண்டில் சிவனொலிபாத மலையை தரிசித்தல் |
| 2. அல்பலசூரி | B. சர்வதேச லியாபாரத்தை மேற்கொள்ள இலங்கை ஆட்சியாளர்கள் உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டமை |
| 3. சுலைமான் | C. செரண்டிப்பிலிருந்து ஒரு குழு இஸ்லாம் சமயத்தை அறிய அரேபியாவிற்கு வருகை தந்தமை |
| 4. இபன் பதூதா | D. கம்பளை காலத்தில் வருகைதந்த தேசசஞ்சாரி |

   சரியான தொடர்பை காட்டுவது
   (1) A,B,C,D (2) B,D,C,A (3) C,B,A,D (4) D,A,B,C

22. வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான கல்வெட்டொன்று கண்டெடுக்கப்பட்ட பண்டைய துறைமுகமாக அமைவது
   (1) கொடவாய (2) மகாதித்த (3) கோகண்னதித்த (4) சூகரதித்த

23. சட்டம், சட்டம் தொடர்பான நிறுவனங்கள் பற்றி கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ள அரச வம்சமாக அமைவது
   (1) மௌரிய (2) இலம்பகர்ன (3) கலிங்க (4) மானவர்ம

24. பணமும் செலாவாணியும் தொடர்பாக **பிழையான** கூற்றாக அமைவது
   (1) நாணயமாற்று தொடர்பாக ஆரம்ப காலத்தில் களிமண்ணாலான வட்ட வடிமான “கலம்” பயன்படுத்தப்பட்டது.
   (2) இந்நாடடில் நாணய பயன்பாட்டை அறிமுகம் செய்தோர் வட இந்தியராவர்.
   (3) காசு அச்சீட்டுக்கு பொறுப்பான அதிகாரி “கன பெடிக” ஆவார்.
   (4) உரோம நாணயமே இலங்கையில் அதிகளவு கிடைத்துள்ள வெளிநாட்டு நாணயமாகும்.

25. “பிள்ளைகள் இல்லாத வாழ்வில் என்ன சுகம்” என பிக்குவிடம் வினவிய பெண்
   (1) விகாரமகாதேவி (2) அசோகமாலா (3) சூழசீவலி தேவி (4) தல்தா லஷ்மி

26. சூழல் பாதுகாப்பு தொடர்பாக சட்டமியற்றிய மன்னர்களுள் ஒருவராக கருதப்பட **முடியாதவர்**
   (1) முதலாம் உபதிஸ்ஸ (2) 4ஆம் மகிந்தன் (3) 3ஆம் உதயன் (4) 5ஆம் காசியப்பன்

27. “சமூக சமநிலையின்மை” என்பது சமூகம்
   (1) பிக்கு – சாதாரண மக்கள் என சமய அடிப்படையில் பிரிக்கப்படல்
   (2) பணக்காரர் – ஏழை என பொருளாதார அடிப்படையில் பிரிக்கப்படல்
   (3) பிரபு – அடிமை என குல அடிப்படையில் பிரிக்கப்படல்
   (4) கிராமம் – நகரம் என சமூக அடிப்படையில் பிரிக்கப்படல்

28. இரண்டாம் நகரமயமாக்கலின் முதல் இராசதானி
   (1) பொலன்னருவை (2) தம்பதெனியா (3) குருநாகல் (4) கண்டி

❖ **பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள A தொடக்கம் I வரையான தகவல்களைப் பயன்படுத்தி 29 ஆம், 30 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| மன்னன் | படையெடுப்பு | இலக்கியம் |
|---|---|---|
| A 3ஆம் விஜயபாகு | D செங்கோவின் ஆக்கிரமிப்பு | G கவி சிலுமின |
| B 3ஆம் விக்கிரமபாகு | E சந்திரபானுவின் ஆக்கிரமிப்பு | H குத்தில காவியம் |
| C 6ஆம் பராக்கிரமபாகு | F ஜோதிய சீடானின் கிளர்ச்சி | I திசர சந்தேசய |

29. மேலுள்ள தகவல்களில் தம்பதெனிய இராச்சியத்துடன் தொடர்புடையவை
(1) A,D,H (2) B,D,I (3) C,F,G (4) A,E,G

30. மேலுள்ள தகவல்களில் கோட்டை இராச்சியத்துடன் தொடர்புடையவை
(1) A,F,H (2) B,D,G (3) C,F,H (4) A,E,I

31. கண்டி இராசதானி காலத்தில் யானை பிடிப்பவர்களிடமிருந்து அறவிடப்பட்ட வரி
(1) ரதா பத்த (2) குருவே பத்த (3) மடிகே பத்த (4) ஹெந்த பத்த

32. கண்டி இராசதானிக்கு இயற்கை பாதுகாப்பு வழங்கிய புவியியல் அம்சமாக **அமையாதது**
(1) ஹோர்ட்டன் சமவெளி (2) பலன கணவாய்
(3) மகாவெளி கங்கை (4) ஹந்தான மலைத்தொடர்

33. மறுமலர்ச்சி தொடர்பாக பிழையான கூற்றாக அமைவது
(1) மறுமலர்ச்சியால் மீண்டும் கிரேக்க, உரோம நாகரிகங்கள் வெளிக்கொணரப்பட்டது
(2) மறுமலர்ச்சி இத்தாலியை மையமாக கொண்டு உருவானது.
(3) மைக்கல் ஆஞ்சலோ வானவியல் விஞ்ஞானம் தொடர்பாக பிரசித்தி பெற்றவராவார்.
(4) மறுமலர்ச்சியில் மத்திய தர வர்க்கத்தின் பங்களிப்பு மிக முக்கியமானது.

34. மறுமலர்ச்சியால் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்களில் **உள்ளடங்காதது**.
(1) பாராளுமன்ற ஆட்சிமுறை (2) பணப்புலக்கம்
(3) ரோம – டச்சு சட்டம் (4) மக்கடம் முறை

➢ **கீழே உள்ள A,B,C,D ஆகிய கருத்துச் சோடிகளுடன் தொடர்பு படுத்தி 35 தொடக்கம் 37 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.**

A 1. தந்துரை போர்
2. முதலாம் விமலதர்ம சூரியனின் அரசுரிமை உறுதிப்படுத்தப்படல்

B 1. ஐரோப்பியரின் ஆசிய வருகை
2. வாஸ்கொடகாமாவின் இந்திய வருகை

C 1. தர்மபாலனின் சிலைக்கு கிரீடம் அணிவித்தல்
2. சீதாவக்கை இராஜசிங்கன் ஆட்சியாளனாதல்

D 1. பத்தேவியா கிழைத்தேய மத்திய நிலையமாதல்
2. ஒல்லாந்தரின் மீள்வருகை

36. முதலாவர் விடயத்தை உறுதிப்படுத்துவதாக இரண்டாவது விடயம் அமைவதைக் காட்டும் சோடி
(1) A (2) B (3) C (4) D

37. முதலாவதன் விளைவாக இரண்டாவது அமைவதைக் காட்டும் சோடி
(1) A (2) B (3) C (4) D

38. முதலாவதற்கும் இரண்டாவதற்குமிடையே தொடர்புடைமை காணப்படாத சோடி
(1) A (2) B (3) C (4) D

39. ஒல்லாந்தர் உச்ச இலாபத்தினைப் பெற்றுக்கொள்ள பின்பற்றிய நடைமுறைகளில் **உள்ளடங்காதது**
(1) போர்துக்கேயரை வெளியேற்ற கண்டி மன்னனுக்கு உதவுதல்
(2) கருவாவிற்கு மேலதிகமாக இலாபம் தரும் ஏனைய பயிர்ச் செய்கைகளில் ஈடுபடல்
(3) வெளிநாடுகளிலிருந்த அரிசி இறக்குமதி செய்தல்
(4) கண்டி மன்னனுடன் முரண்பாடு ஏற்படும்போது கடவைகளை மூடிவிடுதல்

40. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்க மன்னன் நாடுகடத்தப்பட்ட இடம்
(1) பத்தேவியா (2) மதுரை (3) வேலூர் (4) மடகஸ்கார்

(40 புள்ளிகள்)

Past Papers Wiki

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

| | | |
|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 33 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |
| තෙවන වාර විභාගය 2024(2025)<br>மூன்றாம் தவணைப் பரீட்சை 2024 (2025)<br>Third Term Examination 2024 (2025) | අමතර කියවීම් කාලය මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்<br>Additional Reading time 10 minutes | 10 වන ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :
- பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (அ) பகுதி i இல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் இலங்கை படத்திலும் பகுதி ii ல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(அ) (i) பின்வரும் வரலாற்று இடங்களை வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப்படத்தில் குறிக்க.
மல்வத்து ஓயா, கிரிந்தி ஓயா, ஹுருளு வாவி, நாச்சதுவ வாவி, ஊராதோட்டை, ஜம்புகோலப்பட்டிணம், மாதித்த, பொலன்னருவை, பொதான, கஜராகம, செங்கடகல, கோட்டை (12 புள்ளி)

(ii) பின்வரும் வரலாற்று இடங்களை வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப்படத்தில் படத்தில் குறிக்க.
செங்கடல், இத்தாலி, போர்த்துக்கல், கல்லிக்கோட்டை, சுமாத்திரா தீவு, ஜப்பான் (6 புள்ளி)

(ஆ) (i) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடைய விடைகளை ஒழுங்குமுறையில் எழுதுக. (4 புள்ளி)

A. அரேபியர்கள் இலங்கைக்கு வழங்கிய பெயர்.
B. தசகம் எத்தன் பற்றி குறிப்பிடும் கல்வெட்டு
C. சப்ரகமுவ மாகாண மக்கள் மாடுகளை பாதுகாக்க மேற்கொண்ட பூசை
D. பௌத்த இராச்சியம் பற்றிய விபரம் எனும் நூலை எழுதிய சீன நாட்டுப் பிக்கு

(ii) அருகிலுள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.



1. இப் படத்திலுள்ள நிர்மானத்தின் பெயர் என்ன?
2. இது எவ் அகழ்வாராச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டது?
3. அவ் அகழ்வு கடைபெற்ற வரலாற்று நகரம் எது?
4. இவை எதற்கு பயன்படுத்தப்பட்டன.? (4 புள்ளி)

(iii) அருகிலுள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.



1. இப் படத்திலுள்ள நபர் யார்?
2. இவர் எந்நகரில் வாழ்ந்தார்?
3. இவரால் எழுதப்பட்ட நூல் எது?
4. இவர் இலங்கையோடு எவ்விதத்தில் தொடர்புபடுகிறார்?

(4 புள்ளி)

## பகுதி II

**2.** (i) வரலாற்றுக்கு முற்பட்டகால மக்கள் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

(ii) வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களின் வாழ்க்கையில் காணப்பட்ட பண்புகள் இரண்டினை குறிப்பிடுக. (4 புள்ளி)

(iii) முன் வரலாற்றுக் காலம் மாறுநிலைக் காலம் என்பதை இரு காரணங்கள் ஊடாக விவரிக்க. (5 புள்ளி)

(iv) ஆரம்ப வரலாற்றுக்கால குடியிறுப்புக்களின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (6 புள்ளி)

**3.** (i) பின்வரும் நிர்வாகிகளின் புராதனப் பெயர்களைக் குறிப்பிடுக.

A. இல்லத் தலைவன்
B. கிராமத் தலைவன்
C. சிறிய பிரதேசத்தை நிர்வாகித்த பெண் (3 புள்ளி)

(ii) பின்வரும் பொறுப்புக்களை நிறைவேற்றிய அதிகாரிகளை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A. அரசனின் யானைப் பிரிவின் தலைவர்
B. நகர பரிபாலகர்
C. அரச திறைசேரிப் பொறுப்பாளர்
D. தலைமை அமைச்சர் (4 புள்ளி)

(பதகு, அச அதெக, நகர குத்திக, ஹதி அதெக, சேனபதி, படகரிக, மஹமத, வெதனா)

(iii) நாட்டு மக்கள் மன்னனிடமிருந்து எதிர்பார்த்த சேவைகள் இரண்டினை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

(iv) வசப மன்னின் ஆட்சி சிறப்பினை மூன்று காரணிகள் ஊடாக விவரிக்க. (6 புள்ளி)

**4.** (i) அநுராதபுர காலத்தில் கட்டப்பட்ட மகா வாவிகள் மூன்றை பெயரிடுக. (3 புள்ளி)

(ii) பின்வரும் தகவல்களுக்குரிய விடைகளை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து எழுதுக.

A. பெரிய மட்பாண்டங்களை புதைத்து சுவரை மூடியுள்ள கிணறு
B. பெரிய குளங்களிலிருந்து நீரை வெளியேற்றுவதற்காக நிர்மானிக்கப்பட் உறுப்பு
C. கலிங்கலினூடாக நீர் வெளியேறும்போது ஏற்படும் அமுக்கத்தை கட்டுப்படுத்தும் உறுப்பு
D. குளக்கட்டு அரிப்புக்குள்ளாவதைத் தடுக்க உருவாக்கப்பட்ட உறுப்பு

(4 புள்ளி)

(கலிங்கற் தொட்டி, பூம்புனல், அலைதாங்கி, தண்ணீர் விளக்கு, ஊராகெட, மடைக்கதவு)

(iii) பண்டைய இரும்பு உருக்கு தொழிநுட்பத்தின்போது பின்பற்றப்பட்ட இரு முறைகளை உதாரணங்களினூடாக சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

(iv) பண்டைய காலத்தில் இந்நாட்டில் விருத்தியடைந்த வைத்திய முறை நிலவியது என்பதை உதாரணங்கள் மூன்றினூடாக விளக்குக. (6 புள்ளி)



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

5. (i) பின்வரும் தகவல்களுக்குரிய விடைகளை எழுதுக.
A. குற்றவாளியை பிடிக்கும்வரை குற்றவாளி வாழ்ந்த ஊர் மக்களிடமிருந்து அறவிடப்பட்ட வரி
B. சமையல்கலையில் தேர்ச்சிபெற்ற பெண்களுக்கு வழங்கிய பெயர்
C. கூலிக்குப் பெறக்கூடிய அடிமைகள் (3 புள்ளி)
(ii) (a) பண்டைகாலத்தில் உணவு சமைத்த முறைகள் இரண்டையும் (2 புள்ளி)
(b) பண்டையகால உணவிற்கு புளிப்பு சுவையை வழங்க பயன்படுத்திய பொருட்கள் இரண்டையும் குறிப்பிடுக. (2 புள்ளி)
(iii) பண்டைய அரசர்கள் சூழலை பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் இரண்டை உதாரணங்களுடாக எடுத்துரைக்க. (5 புள்ளி)
(iv) பண்டைய சமூகத்தில் பெண்கள் கௌரவமாக வாழ்ந்தார்கள் என்பதை மூன்று காரணிகள் ஊடாக விளக்குக. (6 புள்ளி)

6. (i) இரண்டாம் நகரமயமாக்கலுடன் தொடர்புடைய இராசதானிகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளி)
(ii) பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமையில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் நான்கை குறிப்பிடுக. (4 புள்ளி)
(iii) தம்பதெனிய இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல், இலக்கிய சேவைகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)
(iv) இரண்டாம் நகரமயமாக்கல் காலத்தில் பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் மூன்றினை விவரிக்க. (6 புள்ளி)

7. (i) கண்டி இராச்சியத்திற்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் மூன்றை குறிப்பிடுக. (3 புள்ளி)
(ii) கண்ணீர் இராச்சியத்தின் போது மேற்கொள்ளப்பட்ட கீழுள்ள பதவிகளுக்குரிய பெயர்களை குறிப்பிடுக.
A. அரசு மாளிகையின் உணவுக்கு பொறுப்பாக அதிகாரி
B. சிறிய அலகாக கிராமத்தை பறிப்பாளிப்பவர்.
C. அரசனின் யானைகளுக்கு பொறுப்பான அதிகாரி
D. அரசனின் ஆடை அணிகலன்களுக்கு பொறுப்பான அதிகாரி (4 புள்ளி)
(iii) கண்டி இராச்சிய சமூக கட்டமைப்பை பற்றி இரு காரணங்கள் ஊடாக விளக்குக. (5 புள்ளி)
(iv) கண்டி இராச்சியயத்தின் நிர்வாக கட்டமைப்பு ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த முறையை மூன்று காரணங்களின் ஊடாக விளக்குக. (6 புள்ளி)

## பகுதி III

8. (i) வர்த்தகத்தை மையமாகக் கொண்டு கீழே தேயத்திற்கு வருகை தந்த ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரும் யார்? (3 புள்ளி)
(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு சரியான விடையை எழுதுக (4 புள்ளி)
A. போர்த்துகேயரின் கீழேதேய மைய நிலையம்
B. துருக்கியரினால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய வர்த்தக நகரம்
C. போர்த்துக்கள் அமைந்துள்ள கடல் பிரதேசம்
D. இலங்கைக்கு வருகை தந்த முதல் போர்த்துக்கேய இனத்தவர்
(iii) ஏனைய ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடும் போது நாடுகான் பயணத்தில் போர்த்துக்கேயர் முன்னிலையில் வகிக்க தூண்டிய காரணங்கள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)
(iv) நாடுகான் பயணத்தின் விளைவுகள் மூன்றை விளக்குக. (6 புள்ளி)

9. (i) மறுமலர்ச்சியில் பிரசித்தம் பெற்ற இத்தாலிய மூன்று நகரங்களை குறிப்பிடுக. (3 புள்ளி)

(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு பொருத்தமான விடையை குறிப்பிடுக (4 புள்ளி)

A. புவி கோள வடிவமானது என கண்டுபிடித்தவர்

B. புவியீர்ப்பு சக்தியை கண்டுபிடித்தவர்

C. குருதி சுற்றோட்ட செயற்பாட்டை கண்டுபிடித்தவர்

D. தொலைநோக்கியை கண்டுபிடித்தவர்

(iii) மறுமலர்ச்சி காலத்தில் இத்தாலியில் தோன்றிய சித்திரம், சிற்பக் கலைகளில் காணக்கூடிய விசேட பண்புகள் இரண்டை விளக்குக. (5 புள்ளி)

(iv) மறுமலர்ச்சி இலங்கையில் ஏற்படுத்திய தாக்கத்தை மூன்று காரணங்கள் ஊடாக விளக்கு. (6 புள்ளி)



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2024(2025) **வரலாறு**
## விடைப்பத்திரம் - தரம் - 10

**பகுதி - I**

| | | | |
|---|---|---|---|
| 1-1 | 11-1 | 21-3 | 31-2 |
| 2-4 | 12-3 | 22-1 | 32-1 |
| 3-2 | 13-3 | 23-4 | 33-3 |
| 4-4 | 14-4 | 24-3 | 34-2 |
| 5-2 | 15-3 | 25-1 | 35-2 |
| 6-3 | 16-2 | 26-4 | 36-1 |
| 7-4 | 17-3 | 27-2 | 37-3 |
| 8-2 | 18-2 | 28-2 | 38-4 |
| 9-4 | 19-1 | 29-4 | 39-3 |
| 10-3 | 20-2 | 30-2 | 40-3 |

**பகுதி II**

01. (அ) (i) இலங்கை படத்தில் உரிய இடத்தில் குறித்தால் புள்ளி வழங்கவும்
(ii) உலகப் படத்தில் உரிய இடத்தில் குறித்தால் புள்ளி வழங்கவும்
(ஆ) (i) A. செரண்டிப் B. கழுதியப்பொக்குன கல்வெட்டு C. சாந்திபூஜை D. பாகியம் தேரர்
(ii) 1. உலோக கத்திரிக்கோல் 2. ஆலாஹனா பிரிவின
3. பொலன்நருவை 4. சத்திர சிகிச்சை
(iii) 1. குலோடியஸ் தொளமி 2. ஆலக்ஸாந்திரியா
3. பூகோள சாஸ்திர பிரவேசம் 4. இலங்கை படத்தை வரைதல்

02. (i) அரை வரல் வலயம், ஈர வலயம், தாழ்நில உலர் வலயம்
(ii) வேட்டையாடல், நாடோடி வாழ்க்கை, குழு அமைப்பில் வாழுதல், காய் கனிகளை சேகரித்தல், தாவர உணவுகளை உட்கொள்ளல்,
(iii) சுடப்பட்ட மண்பாண்டம் பாவனை முறையான, மரணச் சடங்கு, நிலையான குடியிருப்பு.
உலோக பாவனை, விவசாயம் மேற்கொள்ளல் (உதாரணங்களுடன் இரண்டை விளக்குக)
(iv) குலத்தை அடிப்படையாகக் கொண்டு கிராமங்களை உருவாக்குதல்
பல்வேறு தொழில்களில் கிராமங்களை உருவாக்குதல்
காரண காரியங்களை அடிப்படையாகக் கொண்டு கிராமங்களை உருவாக்குதல்
பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு கிராமங்கள் உருவாக்குக
(உதாரணங்களுடன் மூன்று காரணங்களை விளக்குக)

03. (i) A. குருபதி B காமினி C. பருமகலு
(ii) A. அதி அதேக்க B. நகர குத்திக்க C. படகாரிக்க D. மஹமத
(iii) நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டு
பொருளாதாரத்தை அபிவிருத்தி அடைய செய்தல்
மக்களின் லௌகீக வாழ்க்கையை வளப்படுத்தல்
(iv) புதிய அரச வம்சத்தை தோற்றுவித்தல்
நாடு முழுவதையும் ஒரே அலகாக ஆட்சி செய்தல்
விவசாயத்தை பலப்படுத்தல்
குளங்களை கட்டியமை
சமய வழிபாடுகளை அபிவிருத்தி அடைய செய்தல்
வரி அளவீடு செய்தல்

04. (i) மின்னேறியாகுளம், கடவுளுவா வாவி, கந்தலாய்குளம், ஹுருளு வாவி,அபயவாவி, யோத வாவி
(ii) A. ஊரா கொட்டை B. மடைக்கதவு C. கலிங்கல் தொட்டி D. அழைதாங்கி
(iii) பலங்கெட சமநல வெவ இரும்பு உற்பத்தி சூலை கண்டுபிடிக்கப்பட்டது
சீகிரியா அலகொலவெவ தெஹிகஹ எலகந்த இரும்புச்சூலை கண்டுபிடிக்கப்பட்டது
(iv) வைத்தியசாலைகள் அமைத்தல்
வைத்தியர்கள் நியமித்தமை
வைத்தியசாலைக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்
கழிவறைகளை ஒழுங்கமைத்தல்

05. (i) A. உள்ளூர் தண்டா பணம் B. மதுபாசிக்கா C. வரி
(ii) a. பொரியல், சுண்டல், குழம்பு b. எலுமிச்சை, தோடம்பழம், கொரக்கா, நாரத்தை
(iii) மரங்களை பாதுகாத்தல், மண்ணை பாதுகாத்தல், மிருகங்களை பாதுகாத்தல்
(iv) அரச பதவிகள் வகித்தமை, பாதுகாப்பாக வாழ்ந்தமை, சமய நடவடிக்கைகளில் பங்கு கொள்ள, சமூகத்தில் முக்கிய பங்கு வகித்தல், சமையலில் தேர்ச்சி பெறல், திருமணம் செய்தல்

06. (i) தம்பதெனியா, யாபகுவ, குருநாகல், கம்பளை, கோட்டை
(ii) பலவீனமான மன்னர்களின் ஆட்சி, கலிங்க பாண்டிய வம்ச போராட்டம், பொருளாதார வீழ்ச்சி, மகனின் ஆக்கிரமிப்பு, மலேரியா நோய் பரவுதல்
(iii) **அரசியல்**
சந்திர பானுவின் முதலாம் ஆக்கிரமிப்பை முறையடித்தல்
மாகனை தோற்கடித்தல்
சந்திர பானுவின் இரண்டாம் படையடிப்பை தோல்வி அடையச் செய்தல்
**இலக்கியம்**
காவிய நூல்கள் எழுதப்பட்டமை
சங்கரகித்த தேரின் தலைமையில் கல்வி பெற்றமை
கலிகால சாகித்திய சர்வஞ்ச பண்டிதன் என பெயர் பெற்றமை
(iv) விவசாய முக்கிய பயிற்செய்கையாக காணப்பட்டது
வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சி அடைந்தமை
வர்த்தகம் வளர்ச்சி அடைந்தமை

07. (i) செங்கடகல, மலையகம், ஸ்ரீவரதனபுர
(ii) A. பத்வாடன நிலமை B. விதானை C. கஜநாயக்க நிலமே D. சலுவடன நிலமே
(iii) குடும்பம் பிரதான சமூக அலகாக இருந்தமை
கிராமிய சமூக அமைப்பு காணப்பட்டமை
நாட்டின் நிலங்கள் அனைத்தும் அரசனுக்கு சொந்தமாக இருந்தமை
ராஜகாரிய முறையில் மக்கள் மன்னனுக்கு சேவை செய்தமை
குலப்பிரிவு காணபட்டமை
(iv) அரசன் அதிகாரம் மிக்கவனாக காணப்பட்டான்
அரசு சபை நிர்வாகத்திற்காக வேண்டி அமைக்கப்பட்டு இருந்தமை
வரி வசூலிக்கும் பிரிவு தோற்றுவிக்கப்பட்டமை
நீதி அதிகாரம் அரசனிடம் காணப்பட்டமை
குற்றங்களும் அதற்குரிய தண்டனைகளும் நிர்ணயிக்கப்பட்டிருந்தமை

08. (i) போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர்
(ii) A. கோவா B. கொன்சுலாந்து நோபில்
C. அத்திலாந்திக் சமுத்திரம் D. லோரஸ் டி அல்மேதா
(iii) அரசு ஆதரவு, அத்திலாந்திக் சமுத்திரத்தில் காணப்பட்டமை, தொளமியின் உலகப்படம், கடல் பயணத்தில் ஆர்வம், வட நட்சத்திரமானி கண்டுபிடிக்கப்பட்டமை
(iv) புதிய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டது
புதிய வர்த்தக பாதைகள் கண்டுபிடிக்கப்பட்டது
ஐரோப்பியர் குடியேற்றங்களை உருவாக்கியமை
ஐரோப்பிய சிந்தனைகள் உலகம் முழுவதும் பரவியமை

09. (i) புளோரன்ஸ், வெனிஸ், ஜெனோவா, ரோம்
(ii) A. நிகலஸ் கொபனிகஸ் B. ஐசக் நியூட்டன் C. வில்லியம் ஹார்வே D. கலிலியோ கலிலி
(iii) வகுப்பு ரீதியான பெயரில் அறிமுகமான கலை படைப்புகள் அவைகளை ஆக்கியோரின் பெயரில் வெளிவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது
சமய கருத்துக்களுக்கு முதலிடம் கொடுப்பதற்கு பதிலாக தனியார்மயத்திட்கு இடம் அளிக்கப்பட்டது
இரசனைகளுக்கு முதலிடம் வழங்கப்பட்டது
(iv) பாராளுமன்ற முறை அறிமுகம்
ரோம டச்சு சட்டம் அறிமுகம்
இலங்கையில் பல யாப்பு முறைகள் அறிமுகம்
ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார தோற்றுவிக்கப்பட்டது
புகையிரத பாதைகள் வளர்ச்சி அடைந்தமை
புதிய வர்த்தக நகரங்கள் தோன்றியமை
ஆங்கிலம் உள்நாட்டு மொழியில் கலந்தமை
கத்தோலிக்க சமயம் பரவியமை
பறங்கியர் என்ற சமூக பிரிவு உருவாகியது
ஐரோப்பிய கலாச்சாரம் உள்நாட்டுக்குள் வளர்ச்சி அடைந்தது


සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# 10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 200



Rs : 300



Rs : 350



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 200



Rs : 150



Rs : 300



Rs : 300



Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE


පොත් 3 ක් ගත්තොත්,
1 ක්
නොමිලේ.
25%
දක්වා වට්ටම් හිමිකරගන්න.
හොඳම පොත් අඩුම මිලට අපෙන් විතරමයි...
දැන්ම lol.lk වෙත පිවිසෙන්න
Atlas
Richard
RATHNA EXERCISE BOOKS
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
LOL.LK
LOL STORE (PVT) LTD
COD
CASH ON DELIVERY
037 20 60 110
071 77 74 440